பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරෝතයනකර්, ත්‍රිකුණාමලය.
Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk

**My No: - NP/09/FRM/2008** **10.11.2008**

மாகாணத் திறைசேரி சுற்று நிருப இல:- PT/21/2008.

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**<u>2008ம் நிதியாண்டிற்கான கணக்குகளை முடிவுறுத்தல்</u>**

மாகாண நிதிப் பிரமாணம் 254 ன் பிரகாரம் 2008 ம் நிதியாண்டுக்கான கணக்குகள் 2008 டிசம்பர் 31 ம் திகதி முடிவுறுத்தல் வேண்டும். எனவே அதற்கான தங்கள் திணைக்கள கணக்கு பொழிப்பு ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் பிழைகளின்றி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I ல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளுக்கு அல்லது அதற்கு முன்னர் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மிக முக்கியமானதாகும். அதன்படி 2008ம் ஆண்டின் கணக்குகள் முடிவுறுத்தல் தொடர்பாக சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளைக் கண்டிப்பாக பின்பற்றல் வேண்டும் என்பதை அறியத் தருகின்றேன். மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபை கணக்குகள் 2004 பெப்ரவரி 24ம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2004ன் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

1. **2008 டிசம்பர் 31ம் திகதியில் காசேட்டை மூடுதல்.**

1.1. 2008ம் ஆண்டிற்கான காசேடு 2008 டிசம்பர் 31ம் திகதியன்று மூடப்படுதல் வேண்டும்.

இக்கருமத்தை மேற் கொள்வதற்காக அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், தங்கள் காரியாலயங்களிலும் உப காரியாலயங்களிலும் காசேடுகள் மூடுவதற்காக பொறுப்பு வாய்ந்த பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் உத்தியோகத்தரின் பெயரிலேயே அதிகாரமளிக்க வேண்டியதுடன் அக்கடிதத்தின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அவ் உத்தியோகத்தரினால் 2008.12.31 திகதிக்குப் பின்னர் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் காசேடுகளில் பதிவு செய்ய முடியாதவாறு ஒவ்வொரு காசேட்டிலும் அத்தினத்தில் பதிவு செய்யப்படும் கடைசிப் பதிவின் கீழ் சிவப்பு மையினால் கோடிட்டு கையொப்பம் இட்டு பெயர், பதவி, திகதி மற்றும் நேரம் ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும்.

1.2. 2008.12.31ம் திகதியன்று காசேட்டில் உள்ள மீதிக்காக **"பிரதம செயலாளர், வட மாகாணம்"** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலை ஒன்றை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு II ல் 2009 ஜனவரி 12ம் திகதி அல்லது அதற்கு முன்னர் "மாகாணத் திறைசேரி, வட மாகாணம், திருகோணமலை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

1.3 அவசர கொடுப்பனவுகளை மேற் கொள்வதற்காக, மாதாந்த கட்டுநிதி விடுவிக்கப்படும் வரை ஆரம்பக் கட்டுநிதியாக 2009 ஜனவரி மாதம் முதற் கிழமையில் ஒரு தொகை விடுவிக்கப்படும்.



பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary 060 2266501
அலுவலகம் / කාර්යාලය / Office 060 2262285
தொலை நகரி / ෆැක්ස් / Fax 026 2226952

1.4. 2008.12.31 திகதியன்று காசேட்டின் மீதி பந்தி 1:2 ல் குறிப்பிடப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் இத் திறைசேரிக்கு அனுப்பாத அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அப் பண மீதியைத் தீர்க்கும் வரை மாகாணத் திறைசேரியால் **கட்டுநிதி எதுவும் விடுவிக்கப்பட மாட்டாது.** ஆகையால் காசேட்டில் மீதிகள் எதுவும் இல்லாது இருப்பினும் அது பற்றி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தை உபயோகித்து 12.01.2009ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

1.5. உப காரியாலயங்களுக்கு வழங்கப்பட்ட கட்டுநிதிகள் 2008 டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் மாகாணத் திறைசேரிக்கு தீர்வு செய்யக் கூடியவகையில் தேவையான முன்னேற்பாடுகள் செய்து கொள்ளல் வேண்டும். வலய, மாவட்ட, பிரதேச அல்லது அது போன்ற உப அலுவலகங்களுடன் இயங்கும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் அதன் உபஅலுவலகங்களுக்கு காசேட்டினை 26.12.2008ற்கு முன் மூடுவதற்கும் காசு மீதிக்கான காசோலையை அதன் தலைமை அலுவலகத்திற்கு 31.12.2008 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறும் ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவுரை வழங்க வேண்டும்.

1.6. மேலும் 2008ம் ஆண்டுக்கான கட்டுநிதி மீதிகள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதும் மாகாணத் திறைசேரிக்கு அந்தந்த திகதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்படுதலும் இதன் பின்னர் மாகாணத் திறைசேரியில் இருந்து கட்டுநிதியைப் பெற்றுக் கொள்வதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு முன் நிபந்தனை என்பதனை கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஆகையால் **இது சம்பந்தமான குறைபாடுகள் மாகாணத் திறைசேரியினால் கட்டுநிதி வழங்குவதை இடைநிறுத்தும் விளைவை ஏற்படுத்தக் காரணமாக அமையும்.**

## 2. 2008 டிசம்பர் மாதத்தின் முதலாவது கணினிப் பிரசுரங்களின் (Computer Printout) வெளியீடுகள்

2.1. 2008 டிசம்பர் மாதத்திற்கான பிரதான கணக்குகளின் பொழிப்பு 2009 ஜனவரி 12ம் திகதி அல்லது அதற்கு முன்னர் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இக் கணக்குகளின் பொழிப்பை தயாரிக்கும் போது கிடைக்கக் கூடியதாகவுள்ள சகல பெறுகைகளும், கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

2.2. மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் உப காரியாலயங்கள் / பிரதேச காரியாலயங்களைக் கொண்ட அமைச்சு / திணைக்களம் அவ் எல்லா காரியாலயங்களில் இருந்தும் பெறுவனவு, கொடுப்பனவு சம்பந்தமான எல்லா விபரங்களும் கிடைக்கும் வரை தாமதிக்காது கணக்குப் பொழிப்பினை உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

2.3 டிசம்பர் மாதத்தின் பிரதான கணக்குப் பொழ்ப்பில் சேர்த்துக் கொள்ள முடியாமல் போன பெறுகைகள், கொடுப்பனவுகள் இருப்பின் அவைகளையும், கணக்குகள் இணக்கம் செய்யப்படும் பொழுது கண்டு பிடிக்கப்படும் வழுக்கள் தொடர்பிலான திருத்தங்களையும் அவற்றுடன் சேர்த்து முதலாவது குறை நிரப்பு கணக்கு பொழிப்பில் உள்ளடக்கி அதை 2009 ஜனவரி 19 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். **இந்த முதலாவது குறை நிரப்பு கணக்குப் பொழிப்பில் 2008ம் வருடத்துடன் தொடர்புடைய அதுவரை கணக்கு வைக்கப்பட்டிராத சகல கொடுப்பனவுகளினதும் பெறுகைகளினதும் விபரங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.**

2.4. 2008 டிசம்பர் மாத கணக்குப் பொழிப்பு மூலம் அறிக்கையிட்ட எல்லாப் பெறுகைகளும், கொடுப்பனவுகளும், பிழையான பதிவுகள் திருத்தம் செய்யப்பட்ட விபரங்களும் அடங்கிய 2008 டிசம்பர் மாதத்திற்குரிய முதலாவது கணக்கு கூற்று (கணினி அச்சுப் பிரசுரங்கள் ) 2009 ஜனவரி 26ம் திகதி அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்படும்.

2.5. கணக்குப் பொழிப்பு மூலம் தங்களால் வாக்குப் பண ஒதுக்கம் அற்ற ஒரு செலவு விடயத்திற்கு வரவு வைத்திருந்தால் அதற்குரிய கணினி அச்சுப் பிரசுரங்களை பரீட்சித்துப் பார்த்து உடனடியாக பிழை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3. 2008 டிசம்பர் மாத 2வதும் இறுதியுமான கணக்குக் கூற்று ( கணினி அச்சுப் பிரசுர வெளியீடு )

3.1 ௨008 டிசம்பர் 31 ம் திகதி வரைக்குமான சகல கொடுக்கல் வாங்கல்களையும் கணக்கிட்டதன் பின்னர் வெளியிடப்படும் முதலாவது கணக்குக் கூற்றுப்படி (கணினி அச்சுப் பிரசுரங்கள்) கண்டு பிடிக்கப்படும் பிழையான பதிவுகள் இருப்பின் அதனைத் திருத்தம் செய்வதற்காக சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஆகியவற்றுக்கு ௨009 பெப்ரவரி 9ம் திகதி வரை இடமளிக்கப்படும். அதன் பிரகாரம் அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஆகியவற்றின் பிழையான பதிவுகள் திருத்தம் செய்தவற்கு ௨ வதும் இறுதியுமான குறைநிரப்பு கணக்குப் பொழிப்புக்களும் மாகாணத் திறைசேரியால் செய்யப்பட வேண்டிய திருத்தங்களோடு தொடர்புடைய விபரங்களும் ௨009 பெப்ரவரி 9ம் திகதிக்கு முன்னர் இம் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.2 இறுதியான கணக்குக் கூற்று ( கணினி அச்சுப் பிரசுரங்கள் ) சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு ௨009 பெப்ரவரி 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. ஒதுக்கீட்டுக் கணக்குகளும் வருமானக் கணக்குகளும்.

4.1 ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் வருமானக் கணக்குகளையும் ௨009 மார்ச் 09ம் திகதி அல்லது அதற்கு முன்னர் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ௨004.0௨.௨4 ஆம் திகதியிடப்பட்ட 1/௨004 ஆம் இலக்க பொதுத் திறைசேரி சுற்றறிக்கையின்படி இம் மாகாண சபையின் மாகாண நிதியத்திற்கான கணக்குகள் ௨009.03.31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணத் திறைசேரியினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

4.2 மாகாண அரச ஊழியர் முற்பணக்கணக்கு சம்பந்தமான வருடாந்த கணக்கிணக்கக்கூற்றுக்களும் இறுதிக் கணக்குகளும் தயாரித்து 16.03.௨009ம் திகதியன்றோ அதற்கு முன்போ மாகாணத் திறைசேரியூடாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

4.3 கணக்காய்வாளர் நாயகத்தால் தனது இறுதிக் கணக்கறிக்கையுடன் சேர்ப்பதற்காக வருடாந்த இருப்பெடுப்பு அறிக்கையையும் (Board of Survey) இறுதிக் கணக்குகளுடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே 31.03.௨009ற்கு முன் அவ் அறிக்கைகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 5. பொது விடயங்கள்

5.1. பெக்ஸ் (Fax) மூலம் அனுப்பப்படும் கணக்குப் பொழிப்புக்கள், மாற்றுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது .

5.2. ௨008 டிசம்பர் மாத பிரதான கணக்குப் பொழிப்பின் பின்னர் கணக்கு வைக்கப்படாத விபரங்கள் மற்றும் பிழையான பதிவுகள் திருத்தம் செய்யப்படுவதற்காக சமர்ப்பிக்கப்படும் குறைநிரப்பு கணக்குப் பொழிப்பில் "**டிசம்பர் குறை நிரப்பு ௨008**" எனக் குறிப்படப்படுதல் வேண்டும்.

5.3. மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்கள் “டிஸ்கட்” (Diskettes) மூலம் சமர்ப்பிக்கும் அமைச்சுக்களும், திணைக்களங்களும், தங்களது குறை நிரப்பு கணக்குப் பொழிப்புக்களையும் அதே போன்று சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த “டிஸ்கட்” இல் குறைநிரப்பு 2008 எனக் குறிப்பிடுதல் வேண்டும். அந்த “டிஸ்கட்” களில் சகல பிழையான பதிவுகளின் திருத்தங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் வேறு மாற்றுக் கட்டளைகள் சமர்ப்பித்தல் கூடாது.

5.4. அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றிற்கு தருவித்தற் கட்டளைகளைச் செய்யும் அல்லது சேவைகளைப் பெறும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் அவற்றிற்குரிய விலைப்பட்டியலை தாமதமின்றிப் பெற்று 2008.12.31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.5. கணக்கு முடிவுறுத்தல் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுவதற்காக திணைக்களங்களினால் பிற செலவீனத் தலைப்புகளில் காட்டப்பட்ட வரவுகள், செலவுகள் தொடர்பிலான தகவல்கள் உரிய அமைச்சுக்கள், திணைக்களங்களால் தாமதமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

**6.** அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஆகியவற்றில் தற்போது பேணப்படும் பல்லினவைப்புக் கணக்குகளுக்கு **மாகாணத் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி இவ் நிதியினை மாற்றம் செய்ய முடியாது என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.**

**7.** மாதாந்தக் கணக்குக்கூற்று ( கணினி அச்சுப் பிரசுரம் ) காணாமல் போவதனால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்வதற்காக கணக்குக் கூற்றுக்களை (கணினி அச்சுப் பிரசுரம்) மாகாணத் திறைசேரிக்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு சகல அமைச்சுக்கள் / திணைக்களங்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

**8.** மேற்குறிப்பிடப்பட்ட கணக்குகளின் முடிவுறுத்தல் சுமூகமாக நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

**9.** கணக்கு முடிவுறுத்தல் சம்பந்தமாக ஏதேனும் விளக்கம் அவசியப்படுமெனின் இம் மாகாணத் திறைசேரியின் பின்வரும் உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

உதவிப் பணிப்பாளர் – கணக்குகளும் கொடுப்பனவும் – 060-2266503

**குறிப்பிட்ட தினத்தில் கணக்குகளை முடிவுறுத்துவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.**

**சி.ரங்கராஜா,**
**பிரதம செயலாளர்,**

பிரதி :

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் , வட மாகாணம்
2. செயலாளர் ,உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு, கொழும்பு.
3. செயலாளர் , நிதி ஆணைக்குழு , கொழும்பு.
4. கணக்காய்வாளர் நாயகம்
5. பணிப்பாளர், மாகாண கணக்காய்வு , வமா

} **தகவலுக்காக**

இணைப்பு – I

**2008ம் நிதிவருட கணக்குகளை முடிவுறுத்தலுக்கான குறித்த திகதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | காசுப்புத்தகத்தை மூடுதல் | | 31.12.2008. |
| 2 | காசுப்புத்தக மீதியை மாகாணத் திறைசேரிக்கு அனுப்புதல் | | 12.01.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 3 | 2009 ஜனவரி மாத முதற் கிழமையில் அவசர செலவுகளை மேற்கொள்வதற்கு ஆரம்ப கட்டுநிதி வழங்குதல் | | 2009 ஜனவரி முதல் வாரத்தில் |
| 4 | 2008 டிசம்பர் மாதத்திற்கான கணக்கு பொழிப்பு சமர்ப்பித்தல் | | 12.01.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 5 | தேவையானவிடத்து மட்டும் 2008 டிசம்பர் மாத உவது மற்றும் இறுதி கணக்கு பொழிப்பு சமர்ப்பித்தல் | | 19.01.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 6 | முதலாவது கணணி அறிக்கையினை வெளியிடுவது | | 26.01.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 7 | மேற்கூறிய அறிக்கையின்படி கண்டு பிடிக்கப்பட்ட வழுக்களை திருத்துதல் | | 09.02.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 8 | இறுதி கணணி அறிக்கை வெளியிடுதல் | | 16.02.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 9 | ஒதுக்கீட்டு கணக்கும் வருமான கணக்கும் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | | 09.03.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 10 | அரச ஊழியர் முற்பணக் கணக்கிணக்கக் கூற்று மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல | | 16.03.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 11 | பொது வைப்பு கணக்கிணக்க கூற்று மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | | 16.03.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 12 | ஆண்டுக் கணக்கெடுப்புச் சபையின் அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | | 31.03.2009 அன்று அல்லது அதற்கு முன் |
| 13 | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் சம்பந்தமாக இறுதிக் கணக்குகள் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல். | | 16.03.2009 அன்று அல்லது அதற்கு முன் |

இணைப்பு II

எனது இல : ……………………………..……
திகதி : ……………………………………..

பிரதிப் பிரதம செயலாளர் – நிதி
மாகாணத் திறைசேரி
வட மாகாணம்
திருகோணமலை

**<u>௨008.1௨.31 ஆம் திகதியன்று காசேட்டை மூடுவதும்</u>**
**<u>மாகாணத் திறைசேரிக்கு காசு மீதியை அனுப்புதலும்</u>**

அமைச்சு / திணைக்களம் : ……………………………………………………………………………………………

இந்த அமைச்சின் / திணைக்களத்தின் ௨008.1௨.31ஆம் திகதி இருந்தவாறான காசேட்டு மீதி ரூபா ……………………………………………………………………… ஆகும் என நான் இத்தால் சான்றுபடுத்துவடன் அம்மொத்த மீதித் தொகைக்காக …………………… இலக்கமும் ……………..………… ஆம் திகதியும் கொண்ட காசோலையொன்று இத்துடன் அனுப்பப்படுகின்றது. மேலும் மேலே குறிப்பிட்ட காசோலை மூலம் தீர்வு செய்யப்பட்ட தொகையை தவிர மாகாணத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு காசு மீதி எதுவும் இல்லை எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலே குறிப்பிட்ட தொகையை அனுப்பிய பின்னர் கட்டுநிதிக்கணக்கு ஒத்திருக்கின்றது / பின்வரும் காரணங்களின் நிமித்தம் ஒத்திருக்கவில்லை.

| | காரணம் | தொகை |
|---|---|---|
| 1. | ……………………………………… | ……………………………………… |
| ௨. | ……………………………………… | ……………………………………… |
| 3. | ……………………………………… | ……………………………………… |
| 4. | ……………………………………… | ……………………………………… |
| | மொத்தம் | |
| | | ========================= |

…………………………………………
**பிரதான கணக்காளர் / கணக்காளர்**
**அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவர்**

**திகதி : ………………………….**